நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 89/2024**

<u>அ.சா. 6 (LW – 8 ) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவகாமிராணி | க/பெ. | : | சங்கரநாராயணன் |
| கிராமம் | : | ஈரோடு | வட்டம் | : | ஈரோடு |
| தொழில் | : | காவல் ஆய்வாளர் | வயது | : | 48 |

<u>11–03–2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>

2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் தற்போது ஈரோடு டவுன் மதுவிலக்கு அமலாக்கபிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2019ம் ஆண்டில் ஈரோடு இருப்புபாதை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஈரோடு இருப்புபாதை காவல் நிலைய குற்ற எண்.91/2016 சட்டப்பிரிவு 328, 379 இதச வழக்கில் தொடர்புலன் விசாரணையை 05–03–2016ம் தேதியில் எடுத்துக்கொண்டேன். புலன் விசாரணையில் 2016ம் வருடம் இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முருகன், புகார்தாரர் தாமஸ் மற்றும் சாட்சிகள் வர்கீஸ் மற்றும் மோகன்தாஸ் ஆகியோர்களை காவல் ஆய்வாளர் குணசேகரன் அவர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எனவே நான் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் எதிரிகளை தேடும்போது கடந்த 08–06–2019ம் தேதி ஈரோடு இருப்புபாதை காவல் நிலைய குற்ற எண்.73/2019 சட்டப்பிரிவு 328, 379 வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி பழனியம்மாள் என்பவரை கைது செய்தபோது அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் குருசாமி மற்றும் மாரியப்பன் இருவரும் 2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஈரோடு இரயில் நிலையத்தில் இரயில் நின்ற சமயத்தில் ஒரு வயதானவற்கு டீயில் மயக்க மருந்து கலந்து கொடுத்து அவரிடமிருந்து ரூ.10,000/–ம் திருடியதாகவும், நீயும் எங்களுடன் வந்தால் பெண்களிடம் நகைகளை திருடினால் அதிக லாபம் கிடைக்கும் என கூறி அழைத்து வந்ததாகவும் கூறியிருந்தார். மேற்படி எதிரி பழனியம்மாள் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருந்த இரயில்வே பாதுகாப்பு படை சேலம் டிவிசன் CPDS ன் பிரிவை சேர்ந்த

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.03.11 18:12:29 +0530

காவலர் 0821334 சரவணன் மற்றும் இரயில்வே பாதுகாப்பு படை மதுரை டிவிசன் CPDSன் பிரிவை சேர்ந்த காவலர் 44 சுரேந்தர் என்பவரையும் 08-06-2019ம் தேதி அன்றே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 09-06-2019ம் தேதியில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் குருசாமி மற்றும் மாரியப்பன் இருவரையும் ஈரோடு இருப்புபாதை காவல் நிலைய குற்ற எண்.73/2019 சட்டபிரிவுகள் 328, 379 இதச வழக்கில் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் இருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்து எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக சம்பிரதாய கைது செய்ய ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இவ்வழக்கில் 13-06-2019ம் தேதியில் எதிரிகள் குருசாமி மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை சம்பிரதாய கைது செய்ய நீதிமன்ற உத்தரவை பெற்று 15-06-2019ம் தேதியில் கோயம்புத்தூர் மத்திய சிறை சாலை சென்று எதிரிகள் இருவரையும் தக்க காரணம் கூறி சிறை கண்காணிப்பாளர் முன்னிலையில் சம்பிரதாய கைது செய்வதாக கூறி கைது குறிப்பாணை வழங்கினேன். ஆனால் எதிரிகள் இருவரும் கைது குறிப்பாணையில் கையெழுத்திட மறுத்துவிட்டார்கள். எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக PT warrant கேட்டு நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் இருந்து PT warrant பெற்று சிறைச்சாலையில் இருந்த எதிரிகளை அழைத்து சென்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, அதன்பிறகு எதிரிகள் இருவரும் கோயம்புத்தூர் மத்திய சிறைசாலையில் அடைக்கப்பட்டார்கள். புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 328, 379ன் கீழ் தண்டிக்கதக்க குற்றங்களுக்கு 24-06-2019ம் தேதியில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் குணசேகரன் கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார்.

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பொதுவாக டிக்கெட் இல்லை என்றால் அந்த நபர் இரயிலில் பயணம் செய்யவில்லை என்று தான் அர்த்தம் என்றால் சரிதான், ஆனால் டிக்கெட் எடுக்காமலும் இரயிலில் பயணம் செய்வார்கள், அதனை கண்டுபிடித்தால் அபராதம் விதிப்பார்கள். இந்த வழக்கில் வாதியிடமிருந்து நான் இரயில்வே டிக்கெட்டை வாங்கவில்லை என்றால் சம்பவம் 2016ல் நடைபெற்றது, புகார்தாரர் ஈரோடு வழியாக இரயிலில் பயணம் செய்துள்ளார். கேரளா போலீசார் இரயில்வே டிக்கெட்டை புகார்தாரரிடமிருந்து பெறவில்லை என்றால் சரிதான். வாதி டிக்கெட்

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.03.11 18:12:39 +0530

எடுக்காமல் இரயிலில் பயணம் செய்ததாகவும், வாதிக்கு அபராதம் விதித்ததாகவும் கேரளா போலீசார் சொல்லவில்லை என்றும், நானும் இந்த வழக்கு குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான். கே.ஜே.தாமஸ் என்ற ஒரு நபரே இல்லை என்றும், கேரளா போலீஸ் மற்றும் எங்களால் ஒரு பொய்யான ஒரு வழக்கு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் தவறு. திருட்டு வழக்கில் சொத்துக்களை பறிமுதல் செய்வது முக்கியமானது என்றால் சரிதான், இந்த வழக்கை பொறுத்து எதிரிகளை போலீஸ் கஸ்டடியில் கொடுக்கவில்லை. கேரளா போலீசார் தொகையை பறிமுதல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் இந்த வழக்கு தொகையை பறிமுதல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து மயக்க மருந்துகளை கைப்பற்றினேனா என்றால் எதிரிகளை போலீஸ் கஸ்டடியில் கொடுக்காததால் அவர்களிடமிருந்து எதுவும் கைப்பற்ற இயலவில்லை. எதிரிகளிடமிருந்து இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் எதிரிகள் தாமாக முன்வந்து ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தால் தான் பதிவு செய்ய முடியும் மற்றும் இந்த வழக்கை பொறுத்தவரையில் எதிரிகளை போலீஸ் கஸ்டடியில் கொடுக்கவில்லை. இந்த வழக்கை பொறுத்தவரையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் இரயில் நகர்ந்து முன்னேரிக்கொண்டே இருக்கும் என்பதால் இரயில் நடக்கும் சம்பவங்களுக்கு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படுவதில்லை மற்றும் நிலையாக உள்ள இடங்களை பொறுத்து தான் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய முடியும். பாதிக்கப்பட்ட புகார்தாரருக்கு தான் எதிரிகளை நேரடியாக தெரியும், அதே போல் புலன் விசாரணை அதிகாரியான எனக்கும் புலன் விசாரணை மூலம் எதிரிகளை தெரியும். முதல் தகவல் அறிக்கையில் இரயில் எண்.16526 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் இரயில் எண்.16525 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது டைப் மிஸ்டேக் ஆகும். முதல் தகவல் அறிக்கையில் எத்தனை எதிரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் புகாரின் அடிப்படையில் ஒரு நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் தவறு. புள்ளிவிபர கணக்கிற்காக பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.03.11 18:12:48 +0530

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.03.11 18:12:56 +0530

II Addl. Sessions Judge, Erode.